# 3.4 நிறைவானத் திருப்தி

**வேத வசனம்:** ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. மத்தேயு 5:3

**அறிக்கை:** தேவன் தம்மை நம்புகிறவர்களுக்கு மிகுதியான ஆசீர்வாதங்களை ஆயத்தம் செய்துள்ளார்

**சத்தியம்:** தேவனுடைய சந்நிதியில் நிறைவான சந்தோஷம் உண்டு. ஆகையால் நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்போம். அப்போது அவர் நம் மனதின் வேண்டுதல்களை நிறைவேற்றுவார்.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- மக்கள், பணத்தையும் மதிப்பையும் பெற உழைப்பதன் மூலம் முழுமையான மனநிறைவை அடைகிறார்களா?
- நீங்கள் பணத்தினாலோ அல்லது புகழினாலோ கவர்ந்தீர்க்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும்? (மத். 6:31-34)

## பாடக்குறிப்புகள்

- **இருதயத்தில் உள்ள வெறுமை**
  - *பிரசங்கி 2:17, 5:10*
- **வெறுமையின் உணர்வை அகற்ற வேண்டும்**
- **நிலைத்திராத திருப்தி**
  - *பிரசங்கி 2:17*
- **நிறைவான திருப்தி**
  - *யோவான் 6:35, சங். 37:4, 16:11*

## வேதப்பகுதி

*சங்கீதம் 23*

## தேவன் - வடிவ வெற்றிடம்

அனைவர் இதயத்திலும் "தேவன் - வடிவ" வெற்றிடம் ஒன்று உண்டு. தேவனோடு உள்ள ஓர் உறவு மட்டுமே அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியும். எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது என்று சாலோமோன் இராஜா தெரிந்து கொண்டார். பணத்தை விரும்புகிறவர்கள் அதனால் திருப்தி அடைகிறதில்லை. அருகில் உள்ள இந்தப்படத்தில் நீங்கள் கடந்த காலத்தில் இந்த வெற்றிடத்தை நிரப்ப பயன்படுத்தித் தோற்றுப்போன வழிகளை எழுதவோ அல்லது வரையவோ செய்யுங்கள். இந்த சோதனைகளுக்குள் மறுபடியும் விழாமல் இருக்க உங்களுக்குள்ளே உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்.




## செயல்

தேவன் நிரப்ப உங்கள் இருதயத்தைத் திறவுங்கள். தேவனுடைய உறவில் உள்ள தேவ பிள்ளைகளுடன் இணைந்திருங்கள். அப்போது உங்கள் இருதயம் எப்போதும் தேவனுக்காக திறந்திருக்கும்.

## சிந்திக்க:

*உங்கள் அமைதியின்மையை நீங்கள் எதிர்மறையான அல்லது வெற்றிதராத வழிகளைக் கொண்டு சரிசெய்ய முயற்சித்ததுண்டா?*

______________________________

______________________________

## ஜெபம்:

*உங்கள் இருதயத்தை நிரப்ப தேவனிடம் வேண்டி ஒரு ஜெபத்தை எழுது.*

______________________________

______________________________